මිනුම් ඒකක, ප්‍රමිති හා සේවා දෙපාර්තමේන්තුව

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்

MEASUREMENT UNITS, STANDARDS AND SERVICES DEPARTMENT

වෙළෙඳ, වාණිජ හා ආහාර සුරක්ෂිතතා අමාත්‍යාංශය

வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

MINISTRY OF TRADE, COMMERCE AND FOOD SECURITY

Metrology in the Digital Era



2022

කාර්යසාධන වාර්තාව සහ වාර්ෂික ගිණුම්

செயலாற்று அறிக்கைகளும் ஆண்டு கணக்குகளும்

PERFORMANCE REPORT AND ANNUAL ACCOUNTS

உள்ளடக்கம்

பணிப்பாளரின் செய்தி 1

முதலாம் அத்தியாயம் - நிறுவன விபரங்கள்

01 அறிமுகம்

1.1. அறிமுகம் 3

1.1.1 அளவீட்டியல் 3

1.2. திணைக்களம் மற்றும் அதன் பணிகள் 4

1.3. நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சட்ட ரீதியான அமைப்பு 5

1.4. நிறுவனத்தின் குறிக்கோள்கள் 5

1.5. நிறுவனத்தின் தொலை நோக்கு, பணிக்கூற்று மற்றும் நோக்கங்கள் 6

1.6. பிரதான பணிகள் 6

1.7. நிறுவன ஒழுங்கமைப்பு 21

1.8. மாவட்ட அலுவலகங்களுடன் தொடர்புகொள்வதற்கான விபரங்கள் 23

1.9. வெளிநாட்டு உதவி கிடைக்கும் கருத்திட்டங்களின் விபரங்கள் 24

02 ஆம் அத்தியாயம் - முன்னேற்றம்

2.1. தேசிய அளவீட்டு ஆய்வு கூடத்தில் அளவீட்டு தடமறிதல் முறையை நிறுவுதல் 28

2.2. ஆய்வுகூடங்களுக்கிடையிலான ஒப்பீடு 28

2.3. அபிவிருத்தி நடவடிக்கைகள் 2022 29

2.4. தேசிய அளவீட்டு ஆய்வு கூடத்தால் நடத்தப்பட்ட பயிற்சி மற்றும் ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்கள் 2022 29

2.5. சர்வதேச தொடர்புகளின் முன்னேற்றம் - 2022 30

2.6. தேசிய அளவீட்டு ஆய்வுகூடத்தின் தரங்கணித்தல் வருமானம் 34

2.7. தேசிய அளவீட்டு ஆய்வுகூடத்தின் முற்பொதியிடல், புகை வெளியேற்ற மற்றும் வேக அளவீட்டு உபகரண வருமானம் 38

2.8. தராசுப் படி, அளவை, நிறுவை மற்றும் அளவீட்டு உபகரணங்களின் மாதிரி அங்கீகாரம் - 2022 38

2.9. வாய்ப்புப் பார்த்தல் வருமானம் 2021 முதல் 2022 வரை 39

2.10. வாய்ப்புப் பார்த்த அலகுகளின் எண்ணிக்கை 2019-2022 40

2.11. சுற்றிவளைப்புகள் மற்றும் தொடரப்பட்ட வழக்குகள் 2021-2022 42

2.12. விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் - 2022 45

2.13. விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களின் காலாண்டு ரீதியான முன்னேற்றம் - 2022 46

2.14. வணிக முயற்சிகளில் ஈடுபட்டுள்ள தனியார் தொழில் முயற்சியாளர்களின் பரம்பல் 2022 47

2.15. வணிக முயற்சிகளில் ஈடுபடும் தனிப்பட்ட தொழில்முயற்சியாளர்களைப் பதிவு செய்தல் - 2022 48

03 ஆம் அத்தியாயம் - நிதி ரீதியான மொத்த செயலாற்றுகை

3.1. நிதி செயலாற்றுகைக் கூற்று (திறண்ட நிதியம்) 50

3.2. நிதி செயலாற்றுகை கூற்று (அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவை நிதியம்) 57

3.3. கணக்காய்வாளர்நாயகத்தின் அறிக்கை 62

04 ஆம் அத்தியாயம் - செயலாற்றுகைச் சுட்டி

4.1. நிறுவனத்தின் செயலாற்றுகை சுட்டி (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்) 80

05 ஆம் அத்தியாயம் - நிலைபேறாண அபிவிருத்தி நோக்கங்கள் (SDG)

5.1. இனங்காணப்பட்ட நிலைபேறாண அபிவிருத்தி நோக்கங்கள் 81

06 ஆம் அத்தியாயம் - மனித வள விபரம்

6.1. ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவம் - பதவியணி கட்டமைப்பு 2022 85

6.2. மனித வள அபிவிருத்தி 88

07 ஆம் அத்தியாயம் - இணக்க அறிக்கை 91

பணிப்பாளரின் செய்தி

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் 2022ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையை உங்களிடம் அன்புடன் சமர்ப்பிக்கின்றோம். 2022ஆம் ஆண்டு உலகளாவிய பெருந்தொற்றின் முடிவுடன் மலர்ந்த உள்ளக நெருக்கடிகள் அதிகரித்த ஆண்டாக இருந்த போதிலும் திணைக்களத்தின் அனேகமான நோக்கங்களில் முன்னேற்றம் ஏற்பட்டது. நாம் தொடர்ச்சியாகப் புதுமைகளை மேற்கொண்டு வருவதுடன், பொருளாதார நெருக்கடிக்குரிய அரச செலவீன முகாமைத்துவ வழிகாட்டல்களுக்கேற்ப அளவீட்டியலுடன் தொடர்புடைய சகல செயற்பாடுகளையும் பலப்படுத்தியுள்ளோம். நாம் எமது செயற்பாடுகளையும் பணிகளையும் முறையாக செய்ததோடு அந்த அர்ப்பணிப்பானது பலமிக்க பௌதீக மற்றும் நிதியியல் முன்னேற்றத்திற்கு பங்களிப்புச் செய்துள்ளது. எமது தொலைநோக்கானது சிறப்பாக பாதுகாக்கப்பட்ட நுகர்வோர் சமூகத்திற்காகச் சரியானதும் நம்பகத்தன்மையும் கொண்ட அளவீட்டினை வழங்குவதாகும். நாம் தற்போது மொத்தமாக ரூபா 400 மில்லியன் வருடாந்த வருமானத்தையீட்டும் நிறுவனம் ஒன்றாவதோடு 370 பேருக்கு அண்மித்த எண்ணிக்கையைக் கொண்ட ஒழுக்கமிக்க பணியாளர்கள் குழாத்தினரையும் கொண்டுள்ளோம்.

வேறு எந்தவொரு நாட்டினைப் போன்றே இலங்கையின் அளவீட்டு முறைகளிலும் விஞ்ஞான ரீதியான அளவீடு, கைத்தொழில் ரீதியான அளவீடு மற்றும் சட்ட ரீதியான அளவீடு என மூன்று படிமுறைகள் உள்ளன. அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களமானது (MUSSD) இலங்கையின் தேசிய அளவீட்டியல் நிறுவனமாவதோடு இம் மூன்று படிமுறைகளும் இவ் ஒரே நிறுவனத்துடன் பிணைக்கப்பட்டுள்ளன. MUSSD மத்திய அளவீட்டியல் அதிகார சபை ஒன்றின் பணியை நிறைவேற்றுவதுடன் அதற்கு விஞ்ஞான ரீதியான அளவீடு மற்றும் சட்ட ரீதியான அளவீடு மட்டுமின்றி கைத்தொழில் அளவீடுகளை ஒருங்கிணைக்கும் பூரண ஏகபோக அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளன. இலங்கையின் தேசிய அளவீட்டு நியமங்களை ஸ்தாபித்தல், பராமரித்தல் மற்றும் அவற்றை வணிக, கைத்தொழில், சுகாதாரம், சுற்றாடல் பாதுகாப்பு...ஆகிய துறைகளுக்கு விரிவாக்கம் செய்யும் பணிகளை நடைமுறைப்படுத்துவது அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள தேசிய அளவீட்டு ஆய்வு கூடத்தினாலாகும்.

1995ஆம் ஆண்டு 35ஆம் இலக்க சட்டத்தைச் செயற்படுத்தவதற்காக ஹோமாகம பிட்டிப்பனையில் உத்தேசித்த கைத்தொழில் நகரத்தில் ஸ்தாபிக்கப்பட்ட இத் திணைக்களத்தின் தேசிய அளவீட்டு ஆராய்ச்சி கட்டடத் தொகுதி இலங்கையின் உயர்மட்ட அளவீட்டியல் அதிகாரசபையாக சர்வதேச நியமங்களுக்கமைவாக தேசிய அளவீட்டு நியமங்களை நடாத்திச் செல்வதையும் உருவாக்குவதையும் மேற்கொள்வதோடு இலங்கையர்களின் வாழ்க்கைத் தரத்தினையும் நியமங்களையும் உயர்த்தும் பொருட்டான அளவீட்டின் அடிப்படையில் ஒழுங்குபடுத்துதல் மற்றும் சேவைச் செயற்பாடுகளினூடாக உற்பத்தியாளர்கள், வர்த்தகர்கள், அளவீட்டு மற்றும் வேறு சேவை வழங்குனர்கள் மற்றும் நுகர்வோர்களுக்காக நீதியினையும் நியாயத்தினையும் உறுதி செய்கின்றது. இலங்கை அரசினால் தேசிய நோக்கங்களை அடையும் நோக்கத்துடன் வறுமை தொடர்பான ஐ.நாவின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கு அமைவாக "மக்கள் மையப் பொருளாதாரத்திற்கான" மூலோபாயங்களுக்காக அளவியல் விஞ்ஞானம் பாரிய பணியை நிறைவேற்றுகின்றது என்பதை நாம் இனங்கண்டுள்ளோம். அதற்கேற்ப கடந்த பொருளாதார நெருக்கடியின் உச்சக்கட்ட நிலைகளிலும் பொருளாதாரத்தின் வணிகத்துறை புனர்வாழ்வளிப்பதற்காக நாம் விசேட கவனம் செலுத்தியதோடு இலங்கையின் உள்ளக வர்த்தகத்தின் நம்பிக்கையை உறுதிப்படுத்துவதற்காக அப்பணி தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

இவ் ஆண்டினுள் பெற்ற வெற்றிகள் தொடர்பாக அரச நிறுவனம் என்ற ரீதியில் நாம் திருப்தியடைவதோடு அவை இவ்வறிக்கையினூடாக வெளிக்காட்டப்பட்டுள்ளது.



எஸ்.என்.அக்குரந்திலக்க
அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைப் பணிப்பாளர்

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் செயலாற்றுகை அறிக்கையும் வருடாந்த கணக்கறிக்கையும் - 2022

1

நிறுவன விபரங்கள்

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைத் திணைக்களத்தின் அடிப்படைக் கொள்கை, அமுலில் உள்ள கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளும் 2022ஆம் ஆண்டில் பெற்ற முன்னேற்றம் தொடர்பான அறிவித்தலும் இவ் அறிக்கையின் நோக்கமாகும்.

1.1.அறிமுகம்

1.1.1. அளவீட்டியல்

அளவீடு தொடர்பில் கற்றுக்கொள்ளும் விடயம் மற்றும் பயன்பாடுகள் என்பன அளவீட்டியல் என அழைக்கப்படுகின்றது. திணிவு, நீளம், நேரம், கனவளவு, மின்னோட்டம், வெப்ப நிலை மற்றும் அமுக்கம் போன்ற பல்வேறு பௌதீக வகையானவற்றுக்குரிய அளவீடுகள் அன்றாட வாழ்க்கையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் எமக்குத் தேவைப்படுகின்றது. தேசிய மற்றும் சர்வதேச ரீதியாகப் பௌதீக விடயங்கள் மற்றும் அளவீட்டு அலகுகளில் ஒரே வகையான நியமங்களில் பேணிச் செல்லும் பொருட்டு மேற்கொள்ளப்படுகின்ற விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிகள் மற்றும் ஒழுங்கமைப்புச் செயற்பாடுகள் அளவீட்டியல் என வரைவிலக்கணமளிக்க முடியும்.




படம் 1: அளவீட்டியலின் தொகுதிகள்

மேற்குறிப்பிட்டவாறு அளவீட்டியலை பிரதானமாக 3 உப துறைகளுக்கு வகைப்படுத்த முடியும். ஒவ்வொரு நாட்டிலும் தேசிய ரீதியான அளவீட்டுத் தொகுதியொன்று வரைவிலக்கணப்படுத்தப்பட்டு அவை தேசிய அளவீட்டு நியமங்களாக அந் நாட்டினுள் ஸ்தாபிக்கும், நடாத்திச் செல்லும் மற்றும் கலைத்துவிடுதல் தொடர்பாக பொறுப்பினை வகிக்கும் நிறுவனம் ஒன்று உள்ளது. அது பொதுவாக ஒவ்வொரு நாட்டினதும் தேசிய அளவீட்டு நிறுவனம் (National Metrology Institute) என அழைக்கப்படுகின்றது. இலங்கையில் அப் பொறுப்பினை அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் வகிக்கின்றது.

1.2. திணைக்களம் மற்றும் அதன் பணிகள்

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் (MUSSD) 1995ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. இத் திணைக்களமானது வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ளது.

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களமானது 2015ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கொழும்பு 05 பூங்கா வீதியில் அமைந்துள்ள (135 பேர்ச்சஸ் அளவினையுடைய) பழைமை வாய்ந்த வளாகத்திலிருந்து இட வசதிகள் போதாமை காரணத்தினாலும் மற்றும் தேசியத் தேவைப்பாடுகள் மற்றும் அளவீட்டியல் துறையின் எதிர்கால அபிவிருத்தியின் பொருட்டும் பிட்டிபனை மாஹேனவத்தை ஹோமாகமை என்ற முகவரியில் அமைந்துள்ள தொழில் நுட்ப நகரத்தின் விஞ்ஞான மத்திய நிறுவனத்திற்கு இடம் மாறியுள்ளது.



படம் 2 : தொழில் நுட்ப நகரம் (Tech City) அமைப்பு (Source: Innovation hub of Asia- Tech City Sri Lanka Western Region Tech City Development Project)

1995ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டத்தின் ஒழுங்குகளை அமுல்படுத்தி சரியான அளவீட்டு முறைகள் மற்றும் அளவீட்டியல் சேவைகளை வழங்குதல், உரிய சட்டதிட்டங்களை வகுப்பதனூடாக நுகர்வோர்களைப் பாதுகாத்தல், சர்வதேச அளவீட்டு தொகுதிகளுக்கேற்ப தேசிய அளவீட்டு நியமங்களை நடாத்திச் செல்லல் மற்றும் இற்றைப்படுத்தல் போன்றவை தொடர்பாகத் திணைக்களம் பொறுப்பு வகிக்கின்றது.

1995ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டத்தின் II வது பகுதியின் (3) பிரிவின் பிரகாரம் அளவீட்டு அலகு, நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்திலுள்ள ஆய்வுகூடம் தேசிய அளவீட்டு ஆய்வுகூடம் என அழைக்கப்படுகின்றது. அச் சட்டத்தின் III வது பிரிவுக்கமைய தேசிய அளவீட்டு நியமங்களை நிறுவுதல், பராமரித்தல் மற்றும் விநியோகித்தல், IV வது பிரிவின் பிரகாரம் வர்த்தகத்தில் அளவீட்டுப் பாவனை V மற்றும் VI ஆம் பிரிவுகளுக்கமைய கைத்தொழில் துறையில் பயன்பாடுகள் தொடர்பில் திணைக்களம் பொறுப்பு வகித்தல் வேண்டும். இதற்கமைய திணைக்களமானது விஞ்ஞான பூர்வமான அளவீட்டியல், கைத்தொழில் ரீதியான அளவீட்டியல் மற்றும் சட்ட ரீதியான அளவீட்டியல் ஆகிய பிரிவுகள் மூன்றினைக் கொண்ட தேசிய அளவீட்டுத் தொகுதிக்காக (Natioanl measurement system) பொறுப்புக் கூறல் வேண்டும்

திணைக்களத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள தேசிய அளவீட்டு ஆய்வுகூடத்தின் (National mesaurement laboratory) மூலம் இலங்கைக்குள் பயன்படுத்தப்படுகின்ற அளவீட்டுடன் தொடர்புடைய தேசிய நியமங்களை இனங்கண்டு அவற்றினை வரைவிலக்கணப்படுத்தி நிறுவுதல், நடாத்திச் செல்லல், கலைத்துவிடுதல் இடம்பெறுகின்றது. இதற்கு மேலதிகமாக கைத்தொழில், பொறியியல், சுற்றாடல்,

சுகாதாரப் பாதுகாப்பு, பெருந்தெருப் பாதுகாப்பு போன்ற துறைகளில் பயன்படுத்தப்படுகின்ற அளவீட்டு உபகரணங்களின் தரங்கணித்தல் மற்றும் வாய்ப்புப்பார்த்தல் போன்றவையும் ஆய்வுகூடத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

சட்ட ரீதியான அளவீட்டியல் பணிகளுக்காகச் சட்ட ரீதியான அளவீட்டியல் தொடர்பான சர்வதேச அமைப்பின் (OIML) பரிந்துரைகளைப் பயன்படுத்துவதுடன் அப் பரிந்துரைகளுக்கு அமைவாக நிறுவை அளவை உபகரணங்களின் மாதிரிகளை அங்கீகரித்தல், ஆரம்ப மற்றும் வருடாந்த வாய்ப்புப்பார்த்தல் மேற்கொள்ளப்படுகின்றன.



படம் 3: அளவீட்டு அலகு, நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்


1.3.நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சட்ட ரீதியான அமைப்பு

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் (MUSSD) 1995ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டம் மூலம் நிறுவப்பட்டுள்ளது.

1.4.நிறுவனத்தின் குறிக்கோள்

சர்வதேச அளவீட்டுத் தொகுதிக்கேற்ப இலங்கையின் தேசிய அளவீட்டுத் தொகுதியை ஸ்தாபித்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல்.

1.5.நிறுவனத்தின் தொலை நோக்கு, பணிக்கூற்று மற்றும் நோக்கங்கள்



1.6.பிரதான பணிகள்

“இலங்கையில் அளவீட்டியலுக்கான மிக உயர் நிறுவனமாக அளவீட்டு அலகு, நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் **(MUSSD)** பின்வரும் பணிகளுக்கான பொறுப்பை வகிக்கின்றது.”

1.6.1 விஞ்ஞான ரீதியான அளவீட்டியல்

அளவீட்டியலின் முக்கியத்துவம் வாய்ந்த துறை இதுவாகும். விஞ்ஞான ரீதியான அளவீட்டியல் என்பது அளவீட்டு அலகுகள் தொகுதி மற்றும் அளவு அமைப்புகள் நிறுவுதல், அளவீட்டியல் தொடர்பாக ஆராய்ச்சி செய்தல், புதிய அளவீட்டு முறைகளைக் கண்டுபிடித்தல், சர்வதேச மற்றும் தேசிய அளவீட்டு நியமங்களை இனங்காணுதல், வரைவிலக்கணப்படுத்தல், நிறுவுதல் மற்றும் அந்த நியமங்களின் ஒருமைப்பாட்டினைப் பேணிக்கொண்டு அவற்றினைப் பயன்படுத்துவோருக்கு விரிவாக்கம் செய்யும் விடயத்துறையாகும். அத்துடன் அளவீட்டில் குறைபாடுகளை இனங்காண்பதும் தீர்த்து வைத்தல் போன்றவற்றுக்குத் தாக்கம் செலுத்தும் கோட்பாட்டு ரீதியான மற்றும் நடைமுறை ரீதியான விடயங்களும் விஞ்ஞான ரீதியான அளவீட்டியல் துறையில் உள்ளடக்கப்பட்டுகின்றது.

விஞ்ஞான ரீதியான அளவீட்டியலுக்குரிய மேற்படி பணிகளை நிறைவேற்றுவதற்காக பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

01. தேசிய அளவீட்டு ஆய்வுகூடம் ஒன்றினை நிறுவுதலினூடாக தேசிய அளவீட்டு அலகுகள் மற்றும் அளவீட்டு நியமத் தொகுதி மற்றும் அளவீட்டு அலகு முறையினை நிறுவுதல்
02. தேசிய அளவீட்டு நியமங்களை வெளிப்படுத்தல், நிறுவுதல், நடாத்திச் செல்லல் மற்றும் விரிவாக்குதல்
03. சர்வதேச அளவீட்டு நியமங்களின் பயன்பாட்டுக்கு ஏற்றவாறு தேசிய அளவீட்டு நியமங்களை நிறுவுதலும் நடாத்திச் செல்லலும்
04. பல்வேறு துறைகளுக்குத் தேவையான அளவீட்டுப் பிரமாணங்கள் மற்றும் தொழில் நுட்பத்தினை விரிவுபடுத்தலும், மேம்பாட்டு நடவடிக்கைகளும்
05. அளவீட்டுத் துறைக்குரிய உள்நாட்டு மற்றும் சர்வதேச மட்டத்திலான இரு தரப்பு மற்றும் பல தரப்பு ஒப்பீட்டு வேலைத் திட்டங்களை மேற்கொண்டு இலக்கமிடல் முறைமை மற்றும் அளவீட்டு சாத்திய வளத்தினை உயர்த்துதல்
06. அளவீட்டியல் ஆராய்ச்சி நடவடிக்கைகள்

07. இலங்கையில் நியம நேரத்தினை நடாத்திச் செல்லலும் www.sltime.org வலைத்தளத்தினூடாக ஒளிபரப்புச் செய்தலும்

1.6.1.1 தேசிய அளவீட்டு ஆய்வுகூடம்

தேசிய அளவீட்டு அலகுத் திட்டத்தினை நிறுவுதல், தரங்கணித்தல் முறை மற்றும் பரிசோதனை ஆய்வுகூடம், ஒழுங்குபடுத்தல் நிறுவனம், கைத்தொழில் மற்றும் சட்ட ரீதியான அளவீட்டியல் துறைகளுக்கான கண்டுபிடிப்புக்களை நடாத்திச் செல்லல் மற்றும் விரிவாக்குவதற்காக அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் ஹோமாகம பிட்டிபனை, மாஹேனவத்தையில் அமைந்துள்ள புதிய வளாகத்தில் 66 ஆய்வுகூட அறைகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் 12 துறைகளுக்காக 28 ஆய்வுகூட அறைகளை நடாத்திச் செல்கின்றது.

தேசிய அளவீட்டு ஆய்வுகூடம்

ஆய்வுகூடம்	ஆய்வுகூடப் பிரதானி	தொலைபேசி இலக்கம்
திணிவு	திரு.ஆர்.டீ.எம்.அலங்க	0112-182262
பரிமாணம்	திரு.ஏ.டீ.டீ.நமிந்த	0112-182267
நேரமும் மீடிரன்	திரு ஆர்.ஜீ.எஸ்.ஏ.பெரேரா	0112-182265
நேரோட்ட மின்னோட்டம்	திரு.ஆர்.ஜீ.எஸ்.ஏ.பெரேரா	0112-182265
வெப்ப நிலை	திரு எஸ்.என்.அக்குரன்திலக்க	0112-182253
அமுக்கம்	திருமதி ஜே.எஸ்.எம்.சில்வா	0112-182264
கனவளவு	திரு எவ்.எல்.ஐ.எஸ்.சம்பத்	0112-182266
மின்வலு மற்றும் சக்தி	திரு.ஆர்.டீ.எம்.அலங்க	0112-182262
இரசாயன அளவீடு	திரு.எஸ்.டீ.ஐ.டயஸ்	0112-182258
வாயு அளவீடு	திரு.ஆர்.ஜீ.எஸ்.ஏ.பெரேரா	0112-182265
ஈரப்பதன்	திருமதி.கே.எஸ்.மல்லவாரச்சி	0112-182263
அளவீட்டு உபகரணங்களின் மாதிரி அனுமதி ஆய்வுகூடம்	திரு.ஆர்.ஜீ.எஸ்.ஏ.பெரேரா	0112-182265

அட்டவனை 01

தேசிய அளவீட்டு ஆய்வுகூடம் - நியமங்கள்

அளவீடு	அடிப்படை/இரண்டாம் நிலை நியமங்கள்
திணிவு	ஒரு1 kg இன் தேசிய முன்மாதிரி 1 mg – 20 kg வரை E1 தர படித் தொகுதி
நீளம்	He/Ne லேசர் ஒளி K தர அளவுத்தொகுதி • K உருக்கு 0.5 mm முதல் 100 mm வரை • K உருக்கு 400 mm, 500 mm • K தங்ஸ்டன் காபைட் 0.5 mm முதல்100 mm வரை • K தங்ஸ்டன் காபைட் 1 mm முதல் 100 mm வரை விசேட 00 தர அளவுத்தொகுதி • 00 செரமிக்0.5 mm முதல் 100 mm வரை • 00 தங்ஸ்டன் காபைட் 0.5 mm முதல் 100 mm வரை 0.1 mm நுன் அளவீடுகள்
நேரமும் மீடிரனும்	முதல்தர சீசியம;(Cs) மீடிரன் நியாயம், முதல் தர ரூபிடியம்(Rb) மீடிரன் நியாயம்
வெப்ப நிலை	இரசம் (Hg) , இரசத்தின் மும்மை புள்ளியிலிருந்து அலுமினியத்தின் (Al) உறையுதல் புள்ளி வரை (-38.834 ^{0}C முதல் 660.323 ^{0}C வரை) நிலையான புள்ளிகள் 7
நேரோட்ட மின்னோட்டம்	மாறும் நியமம் (1000 V மற்றும் 20 A வரை) செனர் வோல்ட் நியமங்கள் 1 V, 10 V தடை நியமங்கள் 1 GΩ வரை
அமுக்கம்	200 MPa வரையிலான திரவ அமுக்க சமநிலை 7 MPa வரையிலான வாயு அமுக்க சமநிலை 175 KPa வரையிலான வாயு அமுக்க சமநிலை
கனவளவு	நுண் குழாயின் தரங்கணித்தல் அலகு - திணிவு அளவீட்டு முறைமை (1 µL to 1 mL) கனவளவு உபகரண தரங்கணித்தல் அலகு- திணிவு அளவீட்டு முறைமை (1 mL - 500 L) கனவளவு உபகரண தரங்கணித்தல் அலகு - கனவளவு முறைமை (2 L - 5000 L)
மின்வலு மற்றும் சக்தி	மின்சக்கதி மற்றும் சக்தி தொடர்பான ஒப்பிட்டு மானி (10 mA to 120 A දක්වා, 300V) MTE K2006 Three phase comparator (0.01%)
இரசாயன அளவீடு	இரண்டாம் நிலை தர நியம கடத்தும் கரைசல்கள் (Secondry Buffer Solutions)- pH-0-14 இரத்த மதுசார நியமத் திரவம் (Reference Solutions - Alcohol in blood)- 50 mg/100 mL,80 mg/100 mL, 150 mg/100 mL இரண்டாம் நிலை நியம கடத்தல் கரைசல்கள் (Secondry Conduetivity Solutions) 84 mg/cm, 1413 mg/cm,12.9 mg/cm , 111.8 mg/cm
ஈரப்பதன்	ஈரப்பதன் அறை (-40 ^{0}C – 180 ^{0}C) ஈரப்பதன் அளவீட்டு உபகரணம் 10 % - 90 % RH)

1.6.1.2. அளவீட்டு கண்டறிதல் தன்மையை (Measurement Traceability) நிறுவுதல்

இலங்கையினுள் அளவீடுகளுக்காக அளவீட்டு கண்டறிதல் தன்மையை(Measurement Traceability) நிறுவி தேசிய அளவீட்டு ஆய்வுகூடத்தின் பொறுப்பாகும். அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டத்திற்கு அமைவாக தேசிய அளவீட்டு ஆய்வுகூடத்தில் பேணப்படும் இலங்கை நியமங்கள் பிறிதொரு நாட்டின் தேசிய ஆய்வுகூடத்தில் தரங்கணித்தல் செய்யப்படும். அப் பிற நாட்டு தேசிய அளவீட்டு ஆய்வுகூடம் சர்வதேச நிறுத்தல் மற்றும் அளத்தல் பணியகத்தின் வலைத்தளத்தின் அடிப்படை ஒப்பீட்டு தரவுத்தளத்தின் (Key Comparison Data Base) தரங்கணித்தல் மற்றும் அளவீட்டு தொடர்பான திறன்களை(Calibration and Measurement Capabilities) மீள் ஸ்தாபித்தலினூடாக சர்வதேச வரவேற்பை பெற்ற ஆய்வுகூடமானது மிகவும் அத்தியவசியமாகும்.

1.6.1.3 ஆய்வுகூடங்களுக்கிடையிலான ஒப்பீடுகளில் கலந்துகொள்ளல் (Inter Laboratory comparisons)

தரங்கணித்தல் மற்றும் பரிசோதனைகள் செய்யப்படும் ஆய்வுகூடங்களுள் சம அளவீட்டை பேணுவதற்காக இடை ஒப்பீடுகள் இடம்பெறுகின்றன.

இலங்கையினுள் இடம்பெறும் அளவீடுகள் ஏனைய நாடுகளில் இடம்பெறும் அளவீடுகளுடன் ஒத்தது என்பதை எடுத்துக்காட்டுவதற்காகச் சர்வதேச மட்டத்தில் நடாத்தப்படும் இடை ஒப்பீடுகளில் தேசிய அளவீட்டு ஆய்வுகூடம் பங்குபற்றுகின்றது. இவ்வாறு இன் நாட்டினுள் அளவீடுகளைப் பெறும் தேர்ச்சியை நிரூபித்தல் சர்வதேச வர்த்தகத்தில் ஏற்படக்கூடிய வர்த்தகத் தடைகளைக் குறைத்துக்கொள்வதில் முக்கியத்துவம் வகிக்கின்றது. மேலும் இன் நாட்டிலுள்ள தரங்கணித்தல் ஆய்வுகூடங்களால் முன்வைக்கும் தரங்கணித்தல் சான்றிதழ்களின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக நடாத்தும் தேசிய இடை ஒப்பீடுகளுக்காகவும் தேசிய அளவீட்டு ஆய்வுகூடம் பங்களிப்பு வழங்குகின்றது.

1.6.1.4 சர்வதேசத் திட்ட அலகினைப் (SI) பேணுதல்



2018ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16ஆம் திகதி நடைபெற்ற தராசுப் படிகள் மற்றும் அளவைகள் தொடர்பான சர்வதேச சம்மேளனத்தின் (CGPM) 26வது கூட்டத் தொடரில் தற்போது பயன்படுத்தப்படுகின்ற SI ஆரம்ப அலகுகளின் வரைவிலக்கணத்தைத் திருத்தம் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைவாக கிலோகிராம், அம்பியர், கெல்வின் மற்றும் முல் ஆகிய ஆரம்ப அலகுகளில் வரைவிலக்கணத்தை மாற்றம் செய்து SI அலகினை திருத்தம் செய்வதற்கான இணக்கத்திற்கு வரப்பட்டது.

இத் தீர்மானத்திற்கமைய 2019ஆம் ஆண்டு மே 20 உலக அளவீட்டியல் தினத்திலிருந்து சகல SI அலகுகளில் இயற்கை உலகை விபரிக்கும் எடுகோள்களுக்கமைய வரைவிலக்கணமளிக்கப்பட்ட புதிய SI ஆரம்ப அலகுகளின் பயன்பாடு ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் SI அலகுத் தொகுதிகளின் எதிர்கால நிலைபேற்றினை உறுதிப்படுத்துவதுடன் குவெண்டம் (சக்தி) தொழில்நுட்பம் உட்பட புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களுக்கும் வழிவகுக்கின்றது. SI அலகு வரைவிலக்கணத்தின் எடுகோள்கள் ஏழும் 03ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

SI ஏழு ஆரம்ப அலகுகளின் புதிய வரைவிலக்கணங்களில் பயன்படுத்திக் கொள்கின்ற ஆரம்ப பௌதீக எடுகோள்கள்.

மாறிலி வரைவிலக்கணப்படுத்தல்	சின்னம்	இலக்க ரீதியான பெறுமதி	அலகு
Cs-133 அணுவின் நிலமட்டத்தில் உயர்நிலைக்கிடையே அதி நுண் நிலை மாறன் மீடிரன்	ΔV_{Cs}	9 192 631 770	Hz
வெற்றிடத்தில் ஒளியின் வேகம்	c	299 792 458	$m\ s^{-1}$
பிலாங்க் மாறிலி	h	$6.626\ 070\ 15 \times 10^{-34}$	J s
தொடக்க நிலை ஏற்றம்	e	$1.602\ 176\ 634 \times 10^{-19}$	C
போல்ட்ஸ்மன் மாறிலி	k	$1.380\ 649 \times 10^{-23}$	$J\ K^{-1}$
எவகத்தரோ மாறிலி	N_A	$6.022\ 140\ 76 \times 10^{23}$	mol^{-1}
ஒளிர் திறன்	K_{cd}	683	$lm\ W^{-1}$

அட்டவனை 3

1.6.1.5 இலங்கையின் நியம நேரத்தினை உருவாக்குவதும் ஒளிபரப்புதலும்

2011ஆம் ஆண்டு முதல் இலங்கையின் நியம நேரத்தினை வழங்குவதில் முன்னோடியாக இருக்கின்ற கௌரவத்தைப் பெறுவது அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களமாகும். நாடு பூராகவும் நேரம் தொடர்பில் ஒரே அளவான நியமம் ஒன்றினை ஏற்படுத்துவதற்காக தேசிய அளவீட்டு ஆராய்ச்சி நிறுவனத்தின் நேரம் மற்றும் மீடிரன் தொடர்பான ஆய்வுகூடத்தின் விசேட கருத்திட்டம் ஒன்றாக இலங்கையின் நியம நேரத்தினை உருவாக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டது. அதற்காக **ருபீடியம் அணுக் கடிகாரம்** ஒன்று உருவாக்கப்பட்டு அதனூடாக சர்வதேச நேரத்திற்கமைவாக இலங்கையின் சரியான நேரம் தயாரித்து வெளியிடப்படுகின்றது. சரியான நேரத்தினைக் காட்டுவதற்காக 2011ஆம் ஆண்டில் ஏப்ரல் மாதம் www.slttime.org வலைத்தளம் திறந்துவைக்கப்பட்டது. நாளின் எந்ததொரு நேரத்திலும் இவ் வலைத்தளத்தை அடைந்து சரியான நேரத்தினை அறிந்து கொள்ளும் வசதிகள் தற்போது இலங்கையர்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. இவ் வலைத்தளத்தினைப் பயன்படுத்தி ஒவ்வொருவரும் தமது கடிகாரங்களின் நேரத்தினை சரியாகத் திருத்திக்கொள்ளுமாறு சகல தரப்பினர்களுக்கும் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றது.

தற்காலத்தில் காலத்தினை அளவிடும் தொகுதியானது **சீசியம் முதல்தர மீடிரன் நியமங்களைக்** கொண்டதாகும். காலத் தொகுதியினை தரங்கணித்தல் செய்துள்ளதோடு தற்போது BIPM இல் UTC (சர்வதேச நியம நேரத்தை) தீர்மானிப்பதற்கு பங்களிப்புச் செய்கின்றது. கண்டறிதல் (Tracebility) பெற்றுக்கொள்வதுடன் நேரத் தொடர்பும் நிறுவப்பட்டுள்ளது. NTP (வலையமைப்பு நேர முதற் குறிப்பு) சேவையை நாடுவோருக்கு சரியான நேரத்தை விநியோகிப்பதற்காக நிறுவப்பட்டுள்ளது.

1.6.1.6 ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்

தேசிய அளவீட்டு ஆய்வுகூடத்தில் இருக்கும் பல்வேறு அளவை நியமங்களை நடாத்திச் செல்வதற்காக மற்றும் விரிவாக்கல் தொடர்பாக ஆய்வுகள் நடாத்தப்படுவதோடு அதனூடாக அந் நியமங்களின் தரம் உறுதிப்படுத்தப்படும். மேலும் கைத்தொழில்களுக்காகப் பயன்படுத்தப்படும் அளவீட்டு உபகரணங்களின் தரங்கணித்தலுக்காக முறைமைகளை விருத்தி செய்தலும் தொடர்ந்து நடைபெறும்.

வெப்பமானி அளவீட்டியல் பிரிவு

- டிஜிட்டல் கைத்தொழில் வெப்பமானிகள் தொடர்பான உள்நாட்டு உற்பத்தியாளர்கள்/ பொருத்துனர்களுக்குத் தேவையான ஆலோசனை சேவை வழங்குதல் மற்றும் அவர்களின் உற்பத்திகளை வெளிநாட்டுச் சந்தைகளுக்கு அனுப்பத் தேவையான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை ஆரம்பித்தல்.

நீள அளவீட்டியல் பிரிவு

- Depth Caliper அளவுத் திருத்தத்திற்காக ஒரு முறையை அறிமுகம் செய்தல் - அளவீட்டு அளவுத்தொகுதிகளினூடாக
- Lever Type Dial Test Indicator தரங்கணித்தல் செய்வதற்காக முறையொன்றை கையாண்டு பார்த்தல் - High Resolution Micrometer ஊடாக.
- Automatic Gauge Block Interferometer உபகரணத் தொகுதியை திருத்தியமைப்பதற்காக ACCIMT நிறுவனத்துடன் ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
- Laser Interferometry முறையில் கிரனைட் தகடொன்றின் தட்டையான தன்மையை (Flatness) அளவிடும் ஆய்வு நடவடிக்கைகள்.
- Zoom Lupe தரங்கணித்தலுக்காக நேர் கோட்டு அளவீட்டு பெரிதாக்கத்தை பயன்படுத்தும் விதத்தை ஆராய்தல்.
- சாதாரண உயரம் அளவிடும் கருவியான Stadiometer தரங்கணித்தல் செய்வதற்காக அதற்கான தரத்தொகுதியொன்றை நிர்மாணித்தல் மற்றும் அவற்றைப் பயன்படுத்தி Stadiometer தரங்கணித்தலை ஆரம்பித்தல்.
- Depth Micrometer தரங்கணித்தல் செய்வதற்காகப் புதிய முறையொன்றை ஆராய்தல் மற்றும் அதனூடாக அளவீடுகளைப் பெறல்.
- தானியங்கள் (நெல்) களஞ்சியப்படுத்துவதற்காகப் பயன்படுத்தும் பாரிய அளவிலான களஞ்சிய முறையான SILO தொடர்பாக ஆராய்தல் மற்றும் SILO அலகு கொள்ளளவு அளவிடும் முறையொன்று தொடர்பாக ஆய்வு செய்தல் - பொலனறுவை மாவட்டத்தில் அரிசி உற்பத்தி ஆலைகளுக்குச் சென்று செய்யப்பட்ட அளவீடுகளை ஆராய்தல். (கனவளவு ஆய்வுப் பிரிவுடன் இணைந்து)
- M வகை கலிபர்களின் உள்ளக அளவீட்டைப் பெறும் தாடைச் சோடியின் தடிப்பை அளவிடுவதற்காகச் செய்யப்பட்ட ஆய்வு - அசைவு நுண்ணோக்கியைப் பயன்படுத்தி இவ் உள்ளக தாடைகளின் தடிப்பை (கத்தி நுனி அகலம்) அளவிடப்பட்டது. அதனூடாகத் துளைகளை அளவிடும் போது ஏற்படும் பிழைகளைக் கண்டறிதல் இதன் நோக்கமாகும்.
- Gauge block அளவு திருத்தத்துக்குரிய Variation-in-Lenth (VIL) அளவீடுகளைப் பெறும் அடிப்படை ஆய்வுச் செயற்பாடு.
- SLAB Accreditation தகமைகளைப் பெறுவதற்காக APMP Peer Review செயற்பாடுகள் நீள அளவீட்டு நிபுணர் Dr.C.S.Kang அவர்களின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது.

மின் வலு மற்றும் சக்தி தொடர்பான அளவீட்டியல் பிரிவு

- ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவி ஒருவர் தேசிய அளவீட்டு ஆய்வுகூடத்துடன் செய்த Intermediate checks for Power meter ஆய்வு.

களவளவு அளவீட்டியல் பிரிவு

- பாரிய அளவிலான இணையான உருளை தாங்கிகளை தரங்கணித்தல் செய்வதற்காக புதிய முறையொன்றை அறிமுகம் செய்தல். தற்போது பாரிய தாங்கிகளை அளவுத் திருத்தம் செய்வதற்காகப் பயன்படுத்தும் கனவளவு முறைமைக்கு மேலதிகமாக கேத்திர கணித முறையை அதற்கமைவாக பெரிய சிலின்டிரிக்கல் தாங்கிகளை தரங்கணித்தல் செய்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- பாய்ச்சல் மானியின் (Flow meter) துள்ளியத்தை அளவிடுவதற்காக முறைமையொன்றை அறிமுகம் செய்தல். பாய்ச்சல் மானியின் துள்ளியத்தை அளவிடுவதற்காகத் தேவைப்படும்

பாய்ச்சல் மானியொன்றும் நீர்ப் பம்பியொன்றையும் கொள்வனவு செய்து பாய்ச்சல் மானியின் துள்ளியத்தை அளவிடுவதற்குரிய ஆய்வுகளைச் செய்வதற்கான வசதிகளை மேம்படுத்தல்.

நேரோட்டம் தொடர்பான அளவீட்டியல் பிரிவு

- பல்கலைக்கழக இறுதியாண்டு செயற் திட்டங்களுக்காக வசதிகளை வழங்குதல்
- துள்ளியமான மற்றும் நிலையான தடைகளின் துள்ளியத்துக்கும் நிலையானதுமான எதிர்ப்பு அளவுத் திருத்தம் மற்றும் வாயப்புப்பார்த்தல் நிலையானதுக்கும் தாக்கம் செலுத்தும் காரணிகள்
- நியம மின்னழுத்தத்தின் சரித்தன்மை மற்றும் நிலையான தன்மையை முன்னேற்றுதல் தொடர்பான திட்டம்
- நியம மின்னழுத்தம் மற்றும் தடை மூலம் நியம மின்னோட்டத்தைப் பெறுவது தொடர்பான கருத்திட்டம்
- உயர் மீடிரன் தர நிலையை ஏற்படுத்திக்கொள்ளல் தொடர்பான திட்டம்
-

அழுக்க அளவீட்டியல் பிரிவு

- சூழலின் வளிமண்டல அழுக்கத்தை அளவிட பயன்படுத்தும் அழுக்க உபகரணங்களை தரங்கணித்தல் செய்வதற்காக ஒரு முறைமையொன்றும் உபகரண திட்டமொன்றையும் நிறுவதல்.

1.6.2 கைத்தொழில் அளவீட்டியலின் செயற்பாடுகள்

கைத்தொழில் அளவீட்டியலின் கீழ் அளவீட்டியலானது கைத்தொழில் மற்றும் உற்பத்திச் செயற்பாடுகளில் பயன்படுத்தும் விதம் தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படுகின்றது. அளவீட்டு உபகரணப் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை உறுதிப்படுத்தி அவற்றைக் கைத்தொழில் போன்ற துறைகளில் பயன்படுத்திக் கொள்ளலும், அளவைகளின் தரக் கட்டுப்பாடும் கைத்தொழில் அளவீட்டியலுக்கு உரித்துடையதாகும். அதன்போது தரமிக்க உற்பத்திச் செயற்பாட்டின் தேவைகளுக்கேற்றவாறு கைத்தொழில் தரங்கணித்தல் நடவடிக்கைகள் மற்றும் அளவீட்டு உபகரண முகாமைத்துவம் மேற்கொள்ளப்படுகின்றது.

கைத்தொழில் அளவீட்டியலுக்குரிய திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகள் பின்வருமாறு.

1. கைத்தொழில் துறையில் பயன்படுத்தப்படுகின்ற தராசுப் படி, அளவைகள் மற்றும் அளவீட்டு உபகரணங்களை தரங்கணித்தல் செய்தல். (ஆய்வுகூடத்தில் மற்றும் வெளிவாரியான தரங்கணித்தல் உள்ளடங்களாக)
2. உற்பத்தி மற்றும் சேவைக் கைத்தொழில்களில் காணப்படும் பாரிய அளவிலான அளவீட்டு உபகரணத் தொகுதிகளைப் பரிசோதித்தல்.
3. கைத்தொழில் சார்ந்த அளவீட்டுகளுக்குரிய பிரச்சினைகளைத் தீர்த்தல் தொடர்பான பயிற்சி மற்றும் ஆலோசனை வழங்குதல்.

1.6.2.1 கைத்தொழில் சார் தரங்கணித்தல்

கைத்தொழில் பொறியியல் அல்லது அது சார் துறைகளில் பயன்படுத்தப்படுகின்ற அழுத்தமானி, வெப்பமானி, தராசுப்படிகள், தராசு, நீளத்தை அளவிடும் கருவிகள், மின்னியல் அளவீட்டு கருவிகள், ஈரமானி, ஆய்வுகூடத் தராசுகள் போன்றவற்றின் தரங்கணித்தல் வசதிகள் தேசிய அளவீட்டு ஆய்வுகூடத்திலிருந்து (NML) பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறான தரங்கணித்தலுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றது.




கைத்தொழில் சார் தரங்கணித்தல் என்பது தேசிய அளவீட்டு ஆய்வுகூடத்தினால் (NML) வழங்கப்படுகின்ற முக்கிய சேவைகளில் ஒன்றாகும். NML ஆல் வழங்கப்படுகின்ற தரங்கணித்தல் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது. தரங்கணித்தல் கட்டணங்களைத் திருத்தம் செய்தல் 2015 ஜூலை மாதத்தின் 02ஆம் திகதியிடப்பட்ட 1921/54 என்ற இலக்க வர்த்தமானியின் பிரகாரம் இடம்பெறுவதோடு அக் கட்டணங்கள் மீளத் திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

தேசிய அளவீட்டு அய்வுகூடத்தினால் 2022ஆம் ஆண்டின் இறுதியில் இற்றைப்படுத்தப்பட்ட சேவைகள்

	ஆய்வுகூடத்தின் பெயர்	வழங்கப்படுகின்ற சேவைகள்
1	**வெப்பநிலை அளவீட்டு ஆய்வுகூடம்** 	1.மருத்துவ வெப்பமானிகள் 2.கைத்தொழில் சார் மற்றும் ஆய்வுகூட வெப்பமானி இலத்தரனியல் வெப்பமானி 3.Dial Thermometer probe 4.தடையை பயன்படுத்தி வெப்ப நிலையை கண்டறியக்கூடிய மற்றும் வெப்பவினை 5.கண்ணாடிகயுள் திரவ வெப்பமானிகள; 6.பதிவு செய்யப்பட்ட அதி உயர் வெப்பமானிகள் 7.உச்ச குறைந்தபட்ச வெப்பமானிகள் 8.சுவர் வெப்பமானிகள் 9.மேற்தள வெப்ப அளவீடு உபகரணங்கள் 10.அகச்சிவப்பு வெப்பமானிகள் 11.அங்கீகரிக்கப்பட்ட பிளட்டினம் தடை வெப்பமானிகள் (ஒப்பீட்டு முறை) 12.பிளட்டினம் தடை வெப்பமானிகள் (நிலையான புள்ளி) 13.கைத்தொழில் சார் வெப்பவினை வெப்பமானி (ஒப்பீட்டு முறை) 14.கைத்தொழில் சார் வெப்பவினை வெப்பமானி (நிலையான முறை) 15.தரங்கணித்தல் தொட்டி (திரவ மற்றும் உலர்) 16.வெப்பநிலை அளவீடு வரைவு (Chart Recorder) 17.ஆய்வுகூட கணலி மற்றும் உலை (Ovan) 18.அமுக்க வடுகலன் 19.நீர் தொட்டி மற்றும் அடைகாக்கும் கருவி 20.மீகுளிரூட்டி மற்றும் குளிருட்டி (ஒற்றை அறை/இரட்டை அறை அல்லது அதற்கு மேல்) 21.குளிரறை (அறை வெப்பநிலை அளவீடு) 22.குளிரூட்டி அறை (அனல் ஆளி/கட்டுப்பாட்டுக் கருவி) 23.அனல் ஆளி/கட்டுப்பாட்டுக் கருவி 24.டேட்டா லொகர்(Data loggers)

2	**மின் வலு மற்றும் சக்தி தொடர்பான ஆய்வுகூடம்** 	1.கிலோவாட் மானி (ஒற்றை அவத்தை) 2.கிலோவாட் மானி (மூன்று அவத்தை) 3.கிலோவாட் அம்பியர் மானி (மூன்று அவத்தை) 4.எடுக்குச் செல்லக்கூடிய மின்வலு/சக்தி மானி/ சக்தி (ஒற்றை அவத்தை) 5. எடுக்குச் செல்லக்கூடிய மின்வலு/சக்தி மானி/ சக்தி (மூன்று அவத்தை) 6.மின் மானிகளை பரிசீலிக்கும் தொகுதி/நியம மானிகள்(ஒற்றை அவத்தை) 7.மின் மானிகளை பரிசீலிக்கும் தொகுதி/நியம மானிகள் (மூன்று அவத்தை) 8.இலத்திரனியல் சக்தி மானி (ஆய்வுகூடம்/நிலையான/ஒற்றை அவத்தை) 9.இலத்திரனியல் சக்தி மானி (ஆய்வுகூடம்/நிலையான/மூன்று அவத்தை) 10வலு மானி (ஆய்வுகூடம் /நிலையான /ஒற்றை /நடமாடும்) 11வலு மானி (ஆய்வுகூடம் /நிலையான /மூன்று /நடமாடும்) 12.இசைவு (Harmonic) சார்ந்த அளவீடுகள்
3	**கனவளவு அளவீட்டு அய்வுக்கூடம்** 	1.பிரிவுகளற்ற அளவீடுகள் 2.கனவளவு அளவீடுகள் 3.அளவீட்டு உருளைகள் 4.பாரிய கனவளவைக் கொண்ட தாங்கிகள் 5.மைக்ரோ பிபெட், பிபெட், பியுரெட்

4	**அமுக்க அளவீட்டு ஆய்வுகூடம்** 	**ISO 17025:2017** அமைவாக அங்கீகரிக்கப்பட்ட **(Accreditation)** மற்றும் சர்வதேச அங்கீகாரம் **(International Recognition)**பெறப்பட்டது. இவ் ஆய்வுகூடத்தினால் பின்வரும் தரங்கணித்தல் சேவைகள் வழங்கப்படும். 1.வாயு அமுக்கமானி 2.திரவ அமுக்கமானி 3.இரசம் குருதி அமுக்கமானி 4.இலத்தரனியல் குருதி அமுக்கமானி 5.சூழல் அமுக்க நிலையை அளவிடும் உபகரணம் **(Barometric Pressure Measuring Devices)** 6.வெற்றிட அமுக்கமானி **(-100**KPa) 7.தனி அமுக்கமானி
5	**திணிவு அளவீட்டு ஆய்வுக்கூடம்** 	1.தராசுப் படிகள் (OIML E_2, F_1, F_2, M) 2.கைத்தொழில் தராசுப் படிகள் (வெள்ளி இரும்பு/ வேறு) 3.தராசு - இலத்தரனியல் / இயந்திர (OIML சரியான தரம் I,II,III,IV) 4.கடதாசு தராசு 5.பாரந்தூக்கித் தராசு 6.தொங்கவிடும் தராசு 7..பாலத் தராசு 8.பொத்தான் இழுவை இயந்திரம் 9.ஹொப்பர் தராசு
6	**நீள அளவீட்டு ஆய்வுகூடம்** 	1.அளவீட்டு தொகுதி 2.அளக்கும் கோல்கள் 3.அளக்கும் நாடாக்கள் 4.கெலிப்பர் 5.மைக்ரோ மானிகள் 6.உயரம் அளவீட்டு தொகுதி 7.சுட்டி அளவீட்டு தொகுதி 8.தடிப்பு அளவீட்டு தொகுதி 9.போர் அளவீட்டு தொகுதி 10.பீலர் அளவீட்டு தொகுதி 11.தடடைத் தன்மை அளவிடும் தொகுதி 12.நுனுக்கு காட்டிகள் 13.சமாந்திரத்தை அளவிடுதல் 14.இரேகை அளவுத்திட்டம்

7	**நேரோட்ட மின்னோட்டம் தொடர்பான ஆய்வுக்கூடம்** 	1.வோல்ட் மீற்றர்(நேரோட்ட மின்னோட்டம்/ஆடலோட்ட மின்னோட்டம்) 2.அமீற்றர்(நேரோட்ட மின்னோட்டம்/ஆடலோட்ட மின்னோட்டம்) 3.ஓம் மீற்றர் 4.மல்டி மீற்றர் 5.ரெசிஸ்டர்(எதிர்ப்பு மீற்றர்) 6.மின்னழுத்த மூலங்கள் (Voltage sources) 7.மின்னோட்ட மூலங்கள் (Current sources) 8.தடை மூலங்கள் (Resistance sources)
8	**இலத்திரனியல் காலம் மற்றும் மீடிறன் ஆய்வுக் கூடம்** 	1.காலம்/நிறுத்தற் கடிகாரம்(Stop watch) 2.மீடிறன்/டெகோமீற்றர்(tacho meter) 3.அலைவுகாட்டி(osilloscope) 4.அலைப்பிறப்பாக்கி(waves generator)
9	**இரசாயனவியல் அளவீட்டு ஆய்வுக்கூடம்** 	1.மதுசாரம் பகுப்பாக்கி (Alchoyzers) 2.பீ.எச்.மீற்றர் (pH meters) 3.கடத்துதிறன் மானி (Conductivity meters) 4.ஆய்வுகூடங்களுக்காகத் தேர்ச்சிப் பரீட்சை நடாத்துதல்(Proficiency Testing)

10	**ஈரப்பதன் அளவீட்டு ஆய்வுகூடம்** 	1.டிஜிட்டல் ஈரபதன் மானி 2.ஈர மற்றும் உலர் குமிழ் ஈரமானி
11	**வாயு தர ஆய்வுகூடம்** 	O_2, CO_2 , CO, HC அளவிடும் உபகரணங்கள்

அட்டவனை 04

1.6.3 சட்ட ரீதியான அளவீட்டியலின் செயற்பாடுகள்

சட்ட நிர்வாகத்திற்குள் உள்ளடங்கும் துறை சட்டரீதியான அளவீட்டியல் என அழைக்கப்படும். அதாவது அளவீடு மற்றும் அளவீட்டு உபகரணங்கள் பயன்படுத்தும் போது பூர்த்தி செய்ய வேண்டிய சட்ட ரீதியான தேவைகளை ஆராய்ந்து நாட்டில் அமுலில் உள்ள சட்டங்களுக்கு ஏற்றதென்பதை உறுதிப்படுத்தும் செயற்பாடாகும். அதற்காக 1995ஆம் ஆண்டு 35ஆம் இலக்கச் சட்டத்தினூடாகத் தேவையான சட்ட ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கேற்ப சுகாதாரம், கைத்தொழில், பொது மக்கள் பாதுகாப்பு, சுற்றாடல் பாதுகாப்பு, வரிவிதித்தல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் நியாயமான வர்த்தகம் ஆகிய துறைகளை கவனத்தில் கொண்டு பிறப்பிக்கப்படுகின்ற சட்ட திட்டங்களை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சட்ட ரீதியான அளவீட்டியல் விடயத்துறைக்குரியதாக அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள் சட்டம் மற்றும் அதில் உள்ளடங்கியுள்ள கட்டளைகள் மூலம் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு வணிகச் செயற்பாட்டிலும் மேற்கொள்ளப்படுகின்ற நிறுவை, அளவை போன்றவை அளவீட்டுச் சட்டத்திற்குட்படுகின்றது. அதன் பிரகாரம் கீழ் குறிப்பிடப்படும் ஒழுங்கமைப்புப் பணிகளின் பொருட்டு சட்டத்தின் மூலம் திணைக்களத்திற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

1. மூன்றாம் நிலை நியமங்களை தரங்கணித்தல் செயற்பாடுகளைத் திட்டமிடல் மற்றும் மாவட்ட மட்டத்தில் மூன்றாம் நிலை நியமங்களைப் பேணிச் செல்லல். (அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு மாவட்டச் செயலாளரும் அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் அத்தியட்சகர் பதவியினை வகிப்பதுடன் மூன்றாம் நிலை நியமங்கள் அவரது பொறுப்பிலுள்ளது)

2. வர்த்தகத்தின் போது பயன்படுத்தப்படுகின்ற சகல வகையான தராசுப் படிகள், அளவீடுகள், நிறுவைகள் மற்றும் அளவீட்டு உபகரணங்களின் ஆரம்ப மற்றும் வருடாந்த வாய்ப்புப்பார்த்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

3. வர்த்தகச் செயற்பாட்டின் போது பயன்படுத்தப்படுகின்ற சகல வகையான தராசுப் படிகள், அளவீடுகள், நிறுவைகள் மற்றும் அளவீட்டு உபகரணங்கள் என்பனவற்றை உற்பத்தி செய்வோர், இறக்குமதி செய்வோர், திருத்தங்களைச் செய்வோர் மற்றும் விற்பனை செய்வோரை வருடாந்தம் பதிவு செய்தல்.

4. சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனை ஒழுங்குகளைச் செயற்படுத்துவதன் மூலமாக நுகர்வோரைப் பாதுகாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

5. சட்ட ரீதியான அளவீட்டியல் தொடர்பாக வர்த்தகர்களையும் நுகர்வோரையும் அறிவுறுத்தல்.

6. வர்த்தகம் மற்றும் கைத்தொழில் துறைகளில் பயன்படுத்தப்படும் நிறுவைகள் மற்றும் அளவை உபகரணங்களின் மாதிரிகளை (Model) அங்கீகரித்தல் (தேசிய அளவீட்டு ஆய்வுகூடம் இச் சேவையினை வழங்குகின்றது)

7. முன் பொதியிடலை (Pre package) பரீட்சிப்பதும் கட்டுப்படுத்துவதும்.

8. வீதிப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறை தொடர்பான அளவீட்டு உபகரணங்களைச் வாய்ப்புப்பார்த்தல்.

9. வர்த்தக நிலையங்களைச் சுற்றி வளைத்து நிறுவைகள் அளவைகளில் மோசடிகளைச் செய்யும் நபர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

1.6.3.1 மூன்றாம் நிலை நியமங்களை மீள வாய்ப்புப்பார்த்தல்

வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் கைத்தொழில்களின் போது பயன்படுத்தப்படுகின்ற தராசுப் படிகள், நிறுவை மற்றும் அளவீட்டு உபகரணங்களை வாய்ப்புப்பார்த்தலுக்காக பயன்படுத்தப்படும் மூன்றாம் நிலை நியமங்கள் ஒவ்வொரு மாவட்டச் செயலகத்திலும் மாவட்டச் செயலாளரின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. அந் நியமங்களின் தரங்கணித்தல், தேசிய அளவீட்டு ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. நியமத் தராசுப்படி, நியம கனவளவு அளவீடுகள் மற்றும் நீளம் தொடர்பான அளவுகள் இம் மூன்றாம் நிலை நியமங்களாகக் கருதப்படுகின்றது.

1.6.3.2 மாதிரிகளை அங்கீகரித்தல்

மாதிரிகளின் அங்கீகாரம் என்பது ஏதேனும் தராசுப் படி, அளவைகள், நிறுத்தல் அல்லது அளவீட்டு உபகரணம் ஒன்றின் உற்பத்தியாளர் ஒருவரால் சந்தைக்கு அனுப்புவதற்கு அல்லது இறக்குமதியாளர் ஒருவரால் வரவழைத்து விற்பனை செய்ய முன்னர் அதனை இலங்கையில் உள்ள அளவீடுகள் தொடர்பான சட்டதிட்டங்களுக்கேற்ப உள்ளதா என தகுதி வாய்ந்த ஆய்வுகூடம் ஒன்றினால் பரிசோதனை செய்து அங்கீகரித்துக் கொள்வதாகும். மாதிரிகளை அங்கீகரிப்பது தொழில்நுட்ப ரீதியான பரிசோதனை ஒன்றாகும். அதன்போது அளவீட்டு உபகரணத்தின் அடிப்படை வடிவங்கள் தேசிய அளவீட்டு ஆய்வுகூடத்தில் முழுமையான ஆய்வுக்குட்படுத்தப்படும். அதன்போது அளவீட்டு உபகரணத்தின் ஒவ்வொரு பகுதியும் நிர்மாணிக்கப்பட்டுள்ள விதமானது சர்வதேச சட்டபூர்வ அளவீட்டியல் அமைப்பின் (International organization of legal metrology, OIML) நியதிகளுக்கு அமைவானதா என ஆராய்ந்து பார்க்கப்படுகின்றது. பரிசோதனைகளின் பெறுபேற்றின் அடிப்படையில் தராசுப்படிகள், வாகனப் புகைமானி பரிசீலனை அலகு மற்றும் எரிபொருள் நிரப்பு

இயந்திரங்கள் (பம்பிகள்) உட்பட அளவீட்டு உபகரணங்களுக்காக அளவீட்டு அலகு நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் மூலம் (MUSSD) மாதிரி அங்கீகாரங்கள் வழங்கப்படுகின்றது. வர்த்தக நடவடிக்கைகள் அல்லது சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தும் அளவை அல்லது நிறுவை உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் இவ் உபகரணங்களைச் சந்தைப்படுத்த முன்பு இத் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வது அவசியமாகும்.

1.6.3.3 மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற நிறுவை மற்றும் அளவை உபகரணங்களை வாய்ப்புப்பார்த்தல், பரிசோதித்தல் மற்றும் சுற்றி வளைப்புகள்

வர்த்தக நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படுகின்ற நிறுத்தல் மற்றும் அளவீட்டு உபகரணங்களைச் வாய்ப்புப்பார்த்தல் (கணிப்பீடு) நடவடிக்கைகளை மேற்கொள்வது மாவட்டச் செயலகங்களில் அமைக்கப்பட்டுள்ள அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைப் பிரிவுகளில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற அளவீட்டு சேவைகள் மற்றும் சாதனங்கள் பரிசோதகர்களினாலாகும். (Measurement Service and Devices Inspectors) மாவட்டச் செயலாளரின் அங்கீகாரத்துடன் அமைக்கப்பட்ட முத்திரையிடும் நிலையங்கள் போன்றே சேவை முகவர்களின் கோறிக்கைகளுக்கேற்ப கள/நடமாடும் முத்திரையிடும் வசதிகள் மேற்கொள்வதும் இதன்போது மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டுள்ள பாலத் தராசுகளும் வருடாந்தம் முத்திரையிடும் பொருட்டு பாலத் தராசுகளை பரிசோதிக்கும் நடமாடும் அலகு ஒன்று (Weighbridge Verification unit) அமைக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள எரிபொருள் நிரப்பும் இயந்திரங்களையும் வருடந்தோறும் வாய்ப்புப்பார்த்தல் (கணக்கிடும்) செய்வதற்காக நடமாடும் அலகு ஒன்று (Fuel Dispensers Verification Unit) அமைக்கப்பட்டுள்ளது. மேலும் புகை வெளியேற்றத்தை பரிசோதிக்கும் உபகரணங்கள் வாய்ப்புப்பார்த்தல் சேவைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

நாட்டினுள் பயன்படுத்தப்படுகின்ற தராசுப் படிகள், தராசுகள், நிறுவை மற்றும் அளவீட்டு உபகரணங்கள் சட்ட திட்டங்களுக்கேற்ப பேணிச் செல்லப்படுகின்றதா என பரீட்சிக்கும் பொருட்டு பரிசோதனைகள் மற்றும் சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது. இவ் வேலைத்திட்டங்கள் நுகர்வோரின் பாதுகாப்பு மட்டுமின்றி நாட்டினுள் சரியான அளவீட்டுத் தொகுதியொன்றினை பேணிச் செல்வதற்கும் உதவுகின்றது.

1.6.3.4 முற் பொதியீட்டுப் பொருட்களை பரீட்சித்தல்

நுகர்வோருக்கு விற்பனை செய்ய முன்னர் பொதி செய்யப்பட்டுள்ள பொருட்கள் முற் பொதியிட்ட பண்டங்கள் என (Pre – Package) அழைக்கப்படுகின்றன. முற் பொதியிடப்படுகின்ற பொருட்களில் குறிப்பிடப்பட்டுள்ள அளவு (திணிவு, கனவளவு, நீளம் போன்றவை) குறிப்பிடப்பட்ட பிரகாரம் உள்ளதா என பரீட்சித்துப் பார்க்கும் போது சட்ட ரீதியான அளவீட்டியல் தொடர்பான சர்வதேச இணக்கப்பாடுகளுக்கு அமைய (OIML –Recommondations) பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றது. முற்பொதியிடலை பரீட்சிக்கும் போது சந்தையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள முற்பொதிகள் மாதிரிகளாக தெரிவு செய்து அவற்றில் உள்ளடங்கும் பொருட்களின் நிகர திணிவு, நிகர கனவளவு அல்லது நீளம் அளவிடப்படுகின்றது. குறிப்பிட்ட முற் பொதிகளின் தொகையினை அவ்வாறு பரிசோதனை செய்து அந்த அளவீடுகள் புள்ளி விபர ரீதியான பகுப்பாய்வுக்கு (Statistical Analysis) உற்படுத்தப்படுகின்றது. OIML விதந்துரைகளுக்கமைவாகத் திணைக்களத்தினால் அடிக்கடி வெளியிடப்படுகின்ற விசேட வர்த்தமானி அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டதாக முற் பொதிகளின் தேறிய அளவீடானது இடமளிக்கக்கூடிய தவறுகளுடன் பரீட்சித்துப் பார்த்து குறித்த முற்பொதியிடல் தொடர்பான இறுதி தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்றது. முற் பொதியிடல் தொடர்பான தகவல்கள் 2002-05-06ஆம் திகதியிடப்பட்ட 1235/13 மற்றும் 2007-05-29ஆம் திகதியிடப்பட்ட 1499/7 இலக்கத்தினையுடைய அதி விசேட வர்த்தமானிகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

1.6.3.5 சட்ட பூர்வ அளவீட்டியலால் கட்டுப்படுத்தப்படுகின்ற வணிகச் செயற்பாடுகளில் ஈடுபடும் தனியார் தொழில் முயற்சியாளர்களின் பதிவு

அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டத்தின் 21வது பிரிவின் பிரகாரம் தராசுப்படி, தராசுகள், நிறுவை, அளவை உபகரணங்கள் விற்பனை செய்கின்ற உற்பத்தி செய்கின்ற இறக்குமதி செய்கின்ற அல்லது திருத்தங்களை மேற்கொள்கின்ற எந்தவொரு அமைப்போ அல்லது நபரோ அதற்காக ஒவ்வொரு ஆண்டிலும் ஜனவரி முதலாம் திகதிக்கு முன் திணைக்களத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும். அதற்காக அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பணிப்பாளரால் நிர்ணயிக்கப்படுகின்ற படிவங்கள் மூலம் விண்ணப்பிக்க வேண்டியதுடன் அதற்காக குறிப்பிட்ட கட்டணம் ஒன்றினையும் செலுத்துதல் வேண்டும். இவ்வாறான பதிவொன்றின் போது வழங்கப்படும் சான்றிதழானது அதனை வழங்கிய ஆண்டின் டிசம்பர் 31ஆம் திகதியுடன் செல்லுபடியற்றதாகின்றது.


எவரேனும் ஒரு நபர் நிறுவை, அல்லது அளவை உபகரணங்களை திருத்தம் செய்யும் வியாபாரம் ஒன்றினை ஆரம்பிக்க முன்னர் அதற்காக தன்னிடம் இருக்க வேண்டிய தகைமைகளையும் திறமையினையும் பூர்த்தி செய்துள்ளமையைக் காட்டும் பொருட்டு திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற செயன்முறைப் பரீட்சை ஒன்றில் தோற்றுதல் வேண்டும். அதற்காகக் குறிப்பிட்டளவு பரீட்சைக் கட்டணத்தையும் செலுத்துதல் வேண்டும்.


தராசுப் படி, நிறுவை அல்லது அளவீட்டு உபகரணங்களைத் திருத்தம் செய்வதற்குத் தேவையான கருவிகள் அல்லது உபகரணங்கள் விண்ணப்பதாரியிடம் உள்ளதா என்பது பரிசோதித்துப் பார்க்கப்படும். அதற்காக திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் விண்ணப்பதாரியின் வேலைத்தளத்தினை பரிசோதனைக்குட்படுத்துவார்கள்.

அவ்வாறான களப் பரிசோதனையொன்றுக்குப் பின்னர் சகல பரிசோதனைகள் தொடர்பில் பணிப்பாளர் திருப்தியடைவாராயின் குறித்த நபருக்கு திருத்தஞ் செய்யும் அனுமதிப் பத்திரம் வழங்கப்படும். (அட்டவணை 18, 19) அந்த அனுமதிப் பத்திரத்தை பிரிதொருவருக்கு வழங்கலாகாது. வர்த்தகத்தின் உரிமையாளர் மாற்றமடைந்தால் தகுதிவாய்ந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் இருப்பது கட்டாயமானதாகும்.

பதிவுக் கட்டணம் உட்பட பதிவு செய்வது தொடர்பிலான ஏனைய சகல தகவல்களும் 2015-07-02ஆம் திகதியிடப்பட்ட 1921/54ஆம் இலக்கத்தினையுடைய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

1.7 நிறுவன ஒழுங்கமைப்பு





பணிக்குழாம் ஒழுங்கமைப்பு அட்டவனை

1.8 மாவட்ட அலுவலகங்களுடன் தொடர்புகொள்வதற்கான விபரங்கள்

மாவட்ட அலுவலகம்	முகவரி	தொலைபேசி இலக்கம்
கொழும்பு	மாவட்ட செயலகம், அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவு மாவட்ட அலுவலகம், நாரஹேன்பிட்ட கொழும்பு 05	0112-500987
கம்பஹா	மாவட்ட செயலகம், அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவு மாவட்ட அலுவலகம், கம்பஹா	0332-221664
களுத்துறை	மாவட்ட செயலகம், அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவு மாவட்ட அலுவலகம், களுத்தறை	0342-221765
புத்தளம்	மாவட்ட செயலகம், அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவு மாவட்ட அலுவலகம், புத்தளம்	0322-266189
குருணாகல்	மாவட்ட செயலகம், அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவு மாவட்ட அலுவலகம், குருணாகல்	0372-228770
கேகாலை	மாவட்ட செயலகம், அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவு மாவட்ட அலுவலகம், கேகாலை	0352-221323
இரத்தினபுரி	மாவட்ட செயலகம், அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவு மாவட்ட அலுவலகம், இரத்தினபுரி	0452-226299
காலி	மாவட்ட செயலகம், அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவு மாவட்ட அலுவலகம், காலி	0912-231211
மாத்தறை	மாவட்ட செயலகம், அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவு மாவட்ட அலுவலகம், மாத்தறை	0412-237079
அம்பாந்தோட்டை	மாவட்ட செயலகம், அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவு மாவட்ட அலுவலகம், அம்பாந்தோட்டை	0472-256160
மொனராகலை	மாவட்ட செயலகம், அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவு மாவட்ட அலுவலகம், மொனராகலை	0552-277406
பதுளை	மாவட்ட செயலகம், அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவு மாவட்ட அலுவலகம், பதுளை	0552-228200
நுவரெலியா	மாவட்ட செயலகம், அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவு மாவட்ட அலுவலகம், நுவரெலியா	0522-235703
கண்டி	மாவட்ட செயலகம், அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவு மாவட்ட அலுவலகம், கண்டி	0812-239971
மாத்தளை	மாவட்ட செயலகம், அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவு மாவட்ட அலுவலகம், மாத்தளை	0662-222135
அனுராதபுரம்	மாவட்ட செயலகம், அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவு மாவட்ட அலுவலகம், அனுராதபுரம்	0252-225190
பொலன்னறுவை	மாவட்ட செயலகம், அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவு மாவட்ட அலுவலகம், பொலன்னறுவை	0272-226706
மட்டக்களப்பு	மாவட்ட செயலகம், அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவு மாவட்ட அலுவலகம், மட்டக்களப்பு	0652-226584
அம்பாறை	மாவட்ட செயலகம், அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவு மாவட்ட அலுவலகம், அம்பாறை	0632-222982
வவுனியா	மாவட்ட செயலகம், அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவு மாவட்ட அலுவலகம், வவுனியா	0242-224816
யாழ்ப்பாணம்	மாவட்ட செயலகம், அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவு மாவட்ட அலுவலகம், யாழ்ப்பாணம்	0212-217399
முல்லைத்தீவு	மாவட்ட செயலகம், அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவு மாவட்ட அலுவலகம், முல்லைத்தீவு	--
மன்னார்	மாவட்ட செயலகம், அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவு மாவட்ட அலுவலகம், மன்னார்	0242-224816
கிளிநொச்சி	மாவட்ட செயலகம், அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவு மாவட்ட அலுவலகம், கிளிநொச்சி	--
திருகோணமலை	மாவட்ட செயலகம், அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவு மாவட்ட அலுவலகம், திருகோணமலை	0262-050800

அட்டவனை 05

1.9 வெளிநாட்டு உதவி கிடைக்கும் கருத்திட்டங்களின் விபரங்கள்



1.9.1 அங்கத்துவம்

அளவீட்டியலுக்குரிய சர்வதேச மற்றும் பிராந்திய ஒத்துழைப்பைப் பேண பல்வேறு நாடுகள் ஒன்றுடனொன்று அளவீட்டியல் கண்ணோட்டத்தில் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்கின்றன. சர்வதேசத்துடன் அளவீட்டு கண்டறிதலை நிறுவுதல் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளின்போது ஏற்படும் தொழில்நுட்ப ரீதியான தடைகளை வெற்றிகொள்ள அத்தொடர்புகள் பயன்படுகின்றன. எம்மிடமுள்ள விஞ்ஞான ரீதியான மற்றும் பிற அளவீட்டு முறைகளுக்குப் பாதுகாப்பான தளமொன்றினை வழங்குதலும் மற்றும் அநேகமான நாடுகளில் ஏற்படும் தொழில்நுட்பச் சிக்கல்களைக் குறைத்துக்கொள்ளவும் சர்வதேச ரீதியான தொடர்புகள் தொடர்ந்தும் அவசியமாகின்றன.

மீற்றர் சமவாயம் மற்றும் எடைகள் மற்றும் அளவீடுகளின் பொது மாநாடு (BIPM) இணை அங்கத்துவம்

மீற்றர் சமவாயம் எனப்படுவது நிறுவைகள் மற்றும் அளவைகள் தொடர்பான சர்வதேச ஒருமைப்பாட்டை பேணுவதற்காக 1875ஆம் ஆண்டு 17 நாடுகளின் பங்குபற்றலுடன் இடம்பெற்ற ஒரு மாநாடாகும். மீற்றர் சமவாயத்தினூடாக நிறுவைகள் மற்றும் அளவைகள் தொடர்பான சர்வதேச குழு(CGPM) மற்றும் அதன் அதிகாரத்தின் கீழ் நிறுவைகள் மற்றும் அளவைகள் தொடர்பான சர்வதேச குழு (CIPM) ஆரம்பமாவதோடு நாடுகளுக்கிடையேயான அரச நிறுவனமான சர்வதேச நிறுவைகள் மற்றும் அளவைகள் பணியகம் (BIPM) உருவாவதும் இவ் உடன்படிக்கையின் கீழாகும்.

நிறுவை, அளவைகள் தொடர்பான சம்மேளனமானது உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் இணை உறுப்புரிமை கொண்ட கண்காணிப்பாளர்களையும் கொண்டதாகும். அதன் முக்கியதோர் பணியானது சர்வதேச அலகு (SI) முறையின் இருப்பு மற்றும் மேம்பாட்டினை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான கலந்துரையாடல்களையும் பரிசோதனைகளையும் நடாத்துவதாகும். நிறுவை, அளவைகள் தொடர்பான சம்மேளனம் பொதுவாக 04 வருடங்களுக்கு ஒரு தடவை பாரிஸ் நகரில் ஒன்றுகூடும்.

இலங்கை அரசாங்கத்தின் சார்பாக அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் மீற்றர் சமவாயத்தில் கையொப்பமிட்டுள்ளதுடன், அது 2007ஆம் ஆண்டில் நிறுவைகள் மற்றும் அளவைகள் சம்மேளனத்தின் இணை உறுப்புரிமையை (Associate Member) பெற்றுக்கொண்டது.

CIPM பரஸ்பரம் தொடர்பான ஏற்பாடுகளில் (CIPM-MRA) கைச்சாத்திடல்

CIPM பரஸ்பர அங்கீகாரம் தொடர்பான ஏற்பாடு (CIPM – MPA) என்பது தேசிய அளவீட்டியல் நிறுவனத்தினால் பேணப்பட்டு வருகின்ற அளவீட்டு நியமங்களினதும், அதனால் வழங்கப்படுகின்ற அளவு திருத்த சான்றிதழ்களின் சமத்துவத் தன்மையை சர்வதேச ரீதியில் வெளிப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஓர் உடன்படிக்கையாகும்.

இதன் பெறுபேறானது உடன்படிக்கையுடன் தொடர்புபட்ட நிறுவனங்களின் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்படுகின்ற (சர்வதேச மீளாய்வாளர்களின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்ற) அளவைத் திருத்தம் மற்றும் அளவீடுகள் தொடர்பான ஆற்றல்களின் பெறுமானமாகும் (Calibration and measurement capabilities CMS). அங்கீகரிக்கப்பட்ட அப் பெறுமானங்கள் மற்றும் மேலும் தொழில்நுட்பத் தகவல்கள் (BIPM) வலைத்தளத்திலுள்ள அடிப்படை ஒப்பீட்டு தரவுத் தளத்தில் KCDB வெளியிடப்பட்டுள்ளன. அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் 2007இல் CIPM - MRA உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதுடன், அளவுத் திருத்த மற்றும் அளவீடு தொடர்பான பெறுமானங்கள் (CMC) KCDB இல் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சட்ட அளவீட்டியல் தொடர்பான சர்வதேச அமைப்பின் (OIML) பூரண அங்கத்துவம்

வணிக ரீதியான இடையூறுகள் மற்றும் உலக வர்த்தக சந்தையில் செலவுகளைக் குறைத்தல் போன்றவற்றின் பொருட்டு சட்ட அளவீட்டியல் அதிகார சபைகள் மற்றும் கைத்தொழில்கள் மூலம் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற ஒழுங்குவிதிகள், நியமங்கள் மற்றும் ஏனைய ஆவணங்களைத் தயாரிப்பதற்காக உருவாக்கப்பட்ட நாடுகளுக்கிடையேயான பிணைப்பு சட்ட அளவீட்டியல் தொடர்பான சர்வதேச அமைப்பு என அழைக்கப்படுகின்றது. சட்ட அளவீட்டியல் தொடர்பான அமைப்பானது உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக உடன்படிக்கையின் தொழில்நுட்ப இடையூறுகள் பற்றிய "சர்வதேச நியம அமைப்பு நிறுவனம்" எனவும் கருதப்படலாம். ஆகவே வர்த்தகம், வர்த்தக ரீதியான இடையூறுகள் பற்றிய உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ள சகல நாடுகளும் OIML பிரகடணத்தை தமது தொழில்நுட்ப ஒழுங்குவிதிகளைத் தயாரிக்கும்போது கவனத்திற் கொள்ள வேண்டும்.

